# வர்த்தகம் மூலதனம்

பெருமாள்

## வேலைவாய்ப்புக்கள் அதிகரிப்பு

ஒரு காலத்தில் வேலை இழப்பினால் துவண்டுபோயிருந்த அமெரிக்காவில் தற்போது வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக கூறப்படுகின்றது. கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டுமே 290,000 புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக கூறப்படுகின்றது. கடந்த நான்காண்டுகளில் ஆறுதலளிக்கும் முதல் செய்தி இதுவே என அமெரிக்கர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இன்னொரு பக்கம் வேலையின்மையின் அளவும் இரட்டை இலக்கத்திலிருந்து 9.9 சதவீதம் என ஒற்றை இலக்கத்துக்கு இறங்கி வந்துள்ளது.

உற்பத்தித் துறை, மருத்துவத் துறை என பல துறைகளில் இதுவரை 805,000 பேர் மீண்டும் வேலைக்குத் திரும்பியுள்ளனர். கடந்த பிப்ரவரியில் 120,000 பேருக்கு வேலை அளிக்கப்பட்டது. விரைவில் அமெரிக்க கொங்கிரசுக்கு தேர்தல் வரவிருப்பதால், வரும் மாதங்களில் அதிக அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் குறியாக உள்ளது ஒபாமா நிர்வாகம். அமெரிக்கப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பினாலும், நிறுவனங்கள் வேலைக்கு ஆளெடுப்பதில் தயக்கம் காட்டின. இப்போது நிலைமை நம்பிக்கை தரும் அளவுக்கு மேம்பட்டுள்ளதால், மீண்டும் அதிக அளவு ஆட்களை எடுக்க ஆரம்பித்துள்ளன என்று கூறப்படுகின்றது.

## உலகின் 5வது பெரிய இந்திய செல்பேசி நிறுவனம்

உலகில் ஐந்து பெரிய செல்பேசி நிறுவனங்களில் ஒன்றாக முன்னேறியுள்ளது இந்தியாவின் பார்தி ஏர்டெல் (Bharti Airtel). ஜெய்ன் ரெலிகொம் சேவையின் ஆபிரிக்கப் பிரிவு முழுவதையும் 10.7 பில்லியன் டொலர்களுக்கு கடந்த இரு மாதங்களின் முன் ஒப்பந்தம் மூலம் வாங்கிவிட்டார் ஏர்டெல் தலைவர் சுனில் மிட்டல். இதன்மூலம் டாடாவுக்குப் பிறகு வெளிநாட்டு நிறுவனம் ஒன்றை இவ்வளவு பெரிய தொகை கொடுத்து வாங்கிய நிறுவனம் ஏர்டெல்தான். அதே நேரம், உலகில் 21 நாடுகளில் பரந்து விரிந்த ஒரே இந்திய நிறுவனம் என்ற பெருமையை ஏர்டெல் மட்டுமே பெறுகிறது. அத்துடன், கடந்த மாதம் வெளியிட்டுள்ள இதன் சர்வதேச சிம் அட்டைகள் 191 நாடுகளில் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆபிரிக்க செல்பெசி சேவைக்கான உடன்படிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த பார்தி ஏர்டெல் தலைவர் சுனில் மிட்டல், “இந்த வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தம் மூலம், உலகின் அனைத்துக் கண்டங்களிலும் ஒரு இந்திய தொலைத்தொடர்பு நிறுவனம் உள்ளது என்ற முத்திரை பதிக்கப்படுகிறது. ஒரு இந்தியனாக இது எனக்குப் பெருமையாக உள்ளது. ஜெய்ன் ரெலிகொம் ஆபிரிக்காவில் ஏற்படுத்தியுள்ள உள்கட்டமைப்பு வசதிகள் மிகச் சிறப்பாக உள்ளன. அவர்கள் போட்டுக் கொடுத்துள்ள




பாதையில் இது நல்ல பயணமாக உள்ளது” என்கிறார்.

எண்பதுகளில் பஞ்சாபின் லூதியானா நகரில் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனையாளராக வாழ்க்கையைத் துவங்கியவர் சுனில் மிட்டல். இன்று உலகின் முதல்நிலை தொலைபேசி சேவை நிறுவனத்துக்கு சொந்தக்காரராக உயர்ந்துள்ளார். இந்த ஒப்பந்தம் மூலம் 180 கோடி மக்கள் தொகை கொண்ட 21 நாடுகளில் ஏர்டெல் கால்பரப்பியுள்ள பெரும் நிறுவனமாக மாறியுள்ளது. ஜெய்ன் ரெலிகொம் மூலம் மட்டுமே 42 மில்லியன் சந்தாதாரர்களைப் பெற்றுள்ளது ஏர்டெல். “இது ஒரு ஆரம்பம்தான். அப்படித்தான் எனக்குப் படுகிறது. வருகின்ற நாட்களில் இன்னும் சில பெரிய நிகழ்வுகளைப் பார்க்கப் போகிறீர்கள்” என்கிறார் சுனில் மிட்டல்.



# நரசிம்மன் பதில்கள்

உங்கள் கேள்விகளை கேட்பதற்கு
MAISON DES MEDIAS 22, Rue Perdonnet, 75010 Paris, France
narasimmanpathilkal@gmail.com

*ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன்னை சந்திப்பதற்கு முன்னர் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் நம்பியாரை சந்தித்துள்ளாரே?*

**ஏ.நிமலன் – பிரான்ஸ்**

சிறீலங்கா அரசு மேற்கொண்ட இன அழிப்பிற்கான ஆதாரங்கள் வெளிவரும் போதெல்லாம் சிறீலங்காவின் போர்க் குற்றத்திற்கான விசாரணை குழு குறித்து ஐ.நா பொதுச் செயலர் கூறுவதும் பின் அது கிடப்பில் போவதும்தானே நடக்கிறது. சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட புதிய ஆதாரம் பான் கீ முன்னுக்கு சிக்கலை உருவாக்கியுள்ளது. இந்நிலையில் பான் கீ முன்னின் உறவினரான விஜய் நம்பியாரை பீரிஸ் சந்தித்தது பான் கீ முன்னை கொஞ்சம் அமைதி காக்க வைக்கவாக இருக்கும். சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சிறீலங்காவின் உள்விவகாரங்களில் ஐ.நா தலையிடக் கூடாது என தெரிவித்திருப்பது, முன்னைய சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் ஐ.நாவிற்கு நுளம்புக்கு மருந்து அடிப்பது மட்டும்தான் அதன் வேலை என்று சொன்னதுபோன்றுதான்.

*விடுதலைப் புலிகள் இயக்கம் சட்ட விரோத அமைப்பு என இந்தியா புதிதாக அறிவித்துள்ளதன் நோக்கம் என்ன?*

**கே.சிவநேசன் – பிரித்தானியா**

தமிழகத்தில் உள்ள தமிழ் உணர்வாளர்களை கட்டுப்படுத்த தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய பொடா, தடாச் சட்டமே இது. இதன் மூலம் ஈழத் தமிழரின் அழிவுக்கு துணைபோனவர்களுக்கு எதிராக குரல் கொடுப்பதை தடுப்பதற்கே இப்புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மிசா, பொடா, தடா போன்ற சட்டங்கள் கொடுமையானவை என்று கூறிய தமிழக முதல்வர் இதை எப்படி அனுமதித்தார்.

*முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளதே?*

**சீ.பார்த்திபன் – பிரித்தானியா**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மகிந்தவை சந்தித்ததுடன் அவர்கள் நினைத்து விட்டார்கள் தமக்கு மகிந்த எதற்கும் அனுமதி தருவார் என்று. அவர்களை மகிந்தர் சந்தித்தது இந்தியாவின் அலோசனைக்கு இணங்கவே. என்ன இருந்தாலும் இவர்களும் தமிழர்கள் தானே. தடுப்பு முகாமில் உள்ளவர்கள் பற்றி தெரிவிக்கவே விமல் வீரன்ச தலைமையிலான குழுவை மகிந்த அனுமதித்துள்ளார்.

*இந்தியாவுக்கு செல்லும் சிறீலங்கா ஜனதிபதி மகிந்த ராஜபக்ச, இனப் பிரச்சினைக்கு தீர்வு திட்டத்தை முன்வைப்பார் என இந்தியா அறிவித்துள்ளதே?*

**டி.யேசுதாஸ் – பிரான்ஸ்**

அண்மையில் தானே இந்திய வெளியுறவுச் செயலர் நிருபாமாராவ் இலங்கையில் உள்ள இரண்டு இனங்களும் பேசி தீர்வுக்கு வரவேண்டும் என்றார். ஏன் மகிந்த இந்தியாவிடம் தீர்வு திட்டத்தை முன் வைக்க வேண்டும். இது தமிழரால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு திட்டத்தை முன்வைத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே இந்த முயற்சி.

*சிறீலங்கா அரசுக்கு கே.பி. சகல வழிகளிலும் ஆதரவு வழங்கிவருவதாக சிறீலங்க அரசு ஆலோசகர் தெரிவித்துள்ளாரே?*

**கே.அழகன் – பிரான்ஸ்**

தமிழீழ விடுதலைப் போராட்டம் எதிரியினால் அழிக்கப்பட்டதைவிட, துரோகிகளினால் சந்தித்த அவலங்களே அதிகம். ‘எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்’ என்று தமிழீழ தேசியத் தலைவரே கூறியிருக்கின்றார். மாத்தயா, கருணா வரிசையில் கே.பியுமா என கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததுதான். எனினும், வருவது ஒருபக்கச் செய்திகளாகவே இருப்பதனால், சுட்டு விரல்களை நீட்டி குற்றம்சாட்டுவதற்கு முன்பாக உண்மைகளை அறிந்துகொள்ள கொஞ்சம் காத்திருப்பதே நல்லதென்று நினைக்கின்றேன்.



**சிறீலங்கா அரசுக்கு கே.பி. சகல வழிகளிலும் ஆதரவு வழங்கிவருவதாக சிறீலங்க அரச ஆலோசகர் தெரிவித்துள்ளாரே?**

*சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அமெரிக்கா இலங்கையின் மனித உரிமைகள் பற்றி கதைத்துக் கொண்டிராமல் இங்கையின் முதலீட்டில் கவனம் செலுத்த வேண்டும் என கூறியுள்ளாரே?*

**பி.விமலன் – பிரித்தானியா**

கடந்த வருடம் சிறீலங்கா படைகள், தமிழர் மீது மேற்கொண்ட இன அழிப்பில் இரசாயன ஆயுதங்களின் பாவனை தொடர்பான பல ஆதரங்களை அமெரிக்கா தெரிந்துள்ள நிலையில், சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அமெரிக்க மனித உரிமைகள் பற்றி பேசாமல் இருக்குமாறு கூறியிருப்பது நகைப்புக்குரியது. ஐ.நா பொதுச் செயலாளர் இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையில் தலையிட வேண்டாம் எனக் கூறியது அமெரிக்காவுக்கு தெரியாதா என்ன?